
# கீதாசார்யன்



உலகளந்த பெருமாள் (பேரகத்தான்)

# மணிவண்ணன்

* மணியை வானவர் கண்ணனை * என்று நம்மாழ்வாரும், * மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா * என்று பெரியாழ்வாரும், * மாலே மணிவண்ணா * என்று ஆண்டாளும் இங்ஙனே மற்றும் பலரும் எம்பெருமானை மணிவண்ணனாகக் கூறியுள்

P. B. அண்ணங்கராசாரியர்

ளார்கள். இதற்கு, இந்திரநீலக்கல்லின் நிறம்போன்றழகிய நிறமுடையவன் என்று ஒரு பொருள். [மணி—ரத்னம்.] ரத்தினத்தின் தன்மைபோன்ற தன்மையுடையவன் என்பது மற்றொரு பொருள். ரத்தினத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளாலே சொல்லத் தகுதியுண்டு. எங்ஙனேயென்னில்:—

ரத்னமானது தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது. ரத்னமென்பது மிகச் சீரியபொருளாதலால் அதனைப் பெற வேண்டிய காலத்தில் அதுவே சிந்தையாகக் கண்ணுறங்காமையும், பெற்றபின் அதனைக் காப்பதற்காகக் கண்ணுறங்காமையும் உலகில் பிரசித்தம்; எம்பெருமான் திறத்திலுமிது காணலாம். எம்பெருமானைப் பெற நினைக்கும் முமுக்ஷுக்கள் *கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே * என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே கண்ணுறங்கார்கள். அப்பெருமானைப்பெற்ற முக்தர்களும் நித்யர்களும் * ஸதா பச்யந்தி ஸூரய: * என்ற சுருதியின் படியும் *உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே என்கிற பெரியாழ்வார் திருமொழியின்படியும் இமையாத கண்ணினராய்க் கண்துஞ்சாமே காப்பிடுவர்கள்.

ரத்னமானது எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி அடங்கியிருக்கும். எம்பெருமானும் எவ்வளவோ பரத்வம் பொலிய நிற்பவனாயினும் * பத்துடை யடியவர்க்கு எளியவன் * என்கிற நம்மாழ்வார் திருவாக்கின் படியே ஆச்ரிதர்களுக்கு எளியனாய்ப் பரம விதேயனாயிருப்பன். * ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் பாயசிருடைப் பண் புடைப்பாலகன் மாயனென்று மகிழ்ந்தனர் * (பெரியாழ்வார் திருமொழி) என்னும்படியான பரத்வம் (மேன்மை) விளங்கா நிற்கச்செய்தேயும் உரலிலே கட்டியடிக்கலாம்படி அடங்கி யிருந்தமை முதலான ஸௌலப்ய (எளிய) காரியங்கள் பலவும் நினைக்கத்தக்கன.

ரத்னமானது கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது. கடல் ரத்நாகரமென்றே பெயர்பெற்றதாதலால் கடலில் ரத்னமிருப்பது ஸித்தம். * ஊருவரியரவமொண்குறவர் மால்யானை பேரவெறிந்த பெருமணியை * (முதல்திருவந்தாதி) என்பது முதலான பாசுரங்களினால் மலையில் ரத்னமிருப்பதும் ஸித்தம். எம்பெருமானும் திருபாற்கடலிலும் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான மலைகளிலும் விளங்குபவன். * மலைமேல்நிற்பாய் கடல் சேர்ப்பாய்* என்ற திருவாய் மொழியும் இங்கே நினைக்கத்தக்கது.

ரத்னமானது தன்னையுடையவனை மார்பு நெறிக்கப் பண்ணும். ரத்னமுடையவர்கள் மஹாதனிகர்களாதலால் செருக்குற்றிருப்பர்களன்றோ. எம்பெருமானும் தன்னையுடைய வர்களை * எனக்காரும் நிகரில்லையே * மாறுளதோ விம்மண் ணின்மிசையே * எனக்கென்னினி வேண்டுவதே * இனி யாவர் நிகரகல்வானத்தே * என்று மார்பு நெறித்துப் பேசப் பண்ணுவன். நாலுநாளில் அழிந்துபோகக்கூடிய ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கக் கண்டால் என்றுமழியாத சாச்வத (ராம) ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கச் சொல்ல வேணுமோ!

ரத்னமானது தன்னைக் கைக்கொண்டவனைப் பலரும் பின்தொடரும்படி பண்ணும். மஹா தனிகர்களைப் பலரும் அநுவர்த்தித்துக் கிடப்பர்களன்றோ எம்பெருமானும் தன்னை யுடையவர்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும்படி பண்ணு வன். மைத்ரேய: பரிப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச * * தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந: * இத்யாதிகள் காண்க. பகவானைக் கைக்கொண்ட மஹான்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கக் காணாநின்றோமே.

ரத்னமானது இடையில் ஒரு புருஷனைக்கொண்டே வாங்கப்படும். [தரகர்கள்' என்று பலருண்டே; அவர்கள் மூலமாகவே பெரும்பாலும் ரத்ன வியாபாரம் நடைபெறும்] எம்பெருமானும் புருஷகாரமுகமாகவே பெறப்படுவன். வேதம்* வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப் பாதம் பணிந்து * என்றார் நம்மாழ்வார். ஸ்ரீராம ரத்னத் தைப் பெற வந்த விபீஷணாழ்வான் * நிவேதயதமாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம் * என்று புருஷகார புரஸ்காரங் கொண்டமை ஸ்ரீராமயண யுத்தகாண்டத்தில் அறியத்தக்கது.

ரத்னமானது மோதிரம், தோடு, ஹாரம் முதலான சில சில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப்பெறும். எம்பெரு மானும் ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப் பதிகளிலே அதிகமான மதிப்புப்பெறுவன்.

ரத்னமானது ஒளியைவிட்டிராது; எப்போதும் ஒளியோடு கூடியே யிருக்கும். எம்பெருமானும் பிராட்டியை விட்டு இரான். *தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே சமாநுஷீ* *அநுஜநுரநுருபருப சேஷ்டா... இந்திரா* இத்யாதி ப்ரமாணங்களின்படியே பிராட்டியோடு கூடியே யிருப்பனெம் பெருமான். * அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா * என்கிற ஸீதாபிராட்டியின் வசனத்தாலும் * அநந்யா

ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா * என்கிற ஸ்ரீராகவன் வசனத்தாலும் பிராட்டியை ஒளியின் ஸ்தானத்திலே உணரலாம்.

ரத்னமானது ஒளியால் மேன்மைபெறுகிறது. ஒளிமிக்க ரத்னத்திற்கே யன்றோ மதிப்பு அதிகம். எம்பெருமானும் பிராட்டியினாலேயே பெருமேன்மை பெகிறான். *திருவில்லாத் தேவரைத் தேறேல்மின்தேவு * என்கிறார் திருமழிசைப்பிரான்

ரத்னமானது தன்னையிழந்தவனைக் கதறிக் கதறி அழப் பண்ணும்; உயர்ந்த ரத்னத்தை இழந்தவன் கதறிக்கதறி யழுவது தவிர வேறென்ன செய்யமுடியும்? எம்பெருமான் படியுமப்படியே. ஸ்ரீராமரத்நத்தை யிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறியழுதமை* விலலாப மத்யே‚இத்யாதிகளில் ப்ரஸித்தம். * ஏரார்ந்தகருநெடுமால் இராமனாய் வனம் புக்கவதனுக்காற்றாத் தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்தான் புலம்பிய வப்புலம்பலும் ஸ்ரீராமாயணாதி ப்ரஸித்தம். * பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி யழுதே னென்கிறார்கள் அறிவிற் சிறந்தவர்கள். * எழில் கொள் நின் திருக்கண்ணிணை நோக்கந் தன்னையுமிழந்தேனிழந்தேனே * இன்பத்தையிழந்த பாவியேனென தாவி நில்லாதே* என்று தெய்வத் தேவகி புலப்பியபுலம்பல் ப்ரஸித்தம். உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கி யழுவன் * என்று கதறுகிறார் நம்மாழ்வார். *ஏகஸ் முஷ்தேநேவ யுக்தம் ஆக்ரந்திதும் நருணாம் * என்று எம்பெருமானுடைய சிந்தனையை ஒரு நொடிப்பொழுது இழந்தாலும் கதறிக்கதறி யழவேணுமென்கிறார்கள் மஹர்ஷிகள். ஆகவே இழவில் கதறியழப்பண்ணுந் தன்மை ஒக்கும்.

ரத்னமானது அதமன் கையிலே கிடைத்தவளவில் அற்ப விலைக்கு மாறும்; மத்யமன் கையில் கிடைத்தவளவில் உள்ளபடியான விலைக்கு மாறும்; உத்தமன் கையில் கிடைத்த

வளவில் விலைக்கு ஆட்படாமல் ஸ்வயம்போக்யமாகும். [இதன் விவரணம்;] மீன் பிடிக்கிற செம்படவன் கையிலும் விலையுயர்ந்த ரத்னம் கிடைப்பதுண்டு; அவன் அதன் மதிப்பை யறியாதவனுகையாலே அற்ப விலைக்கு அதை விற்றுவிடுவான். *"மாமதியம் திளைக்குங்கொடி மாளிகைசூழ் தெருவில் செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று முன்றில் வளைக்கை நுளைப்பாவையர்மாறு நாங்கூர்" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் இது அறிய வெளிது. அதே ரத்னம் ஒரு வியாபாரியின் கையில் கிடைத்தால் அவன் அதன் மதிப்பை யறிந்தவனுகையாலே உள்ளபடியான விலைக்கே விற்பன். அதே ரத்னம் ஒரு மஹாராஜன் கையில் கிடைத்தால் அவனுக்கு அதை விற்று ஆகவேண்டிய தொன்றுமில்லாமையாலே விலை கோராமல் அதை ஹாரத்திலேயழுத்தி ஸ்வயம் போக்யமாக அணிந்துகொள்ளுவன். இம் மூன்றுபடிகளையும் உலகில் எளிதாகக் காணுநின்றோம். எம்பெருமான்படியுமிப்படியே. க்ஷுத்ரர்கள் எம்பெருமான் பக்கலிலே ஐச்வர்யம் ஸந்தானம் என்றிங்ஙனே அற்பபலன்களைப் பெற்றுப் போவர்கள். சிலர் மோக்ஷத்தை வேண்டிப் பெற்றுப் போவர்கள். அவன்பக்கலில் நாம் வேண்டுவ தொன்றுண்டோ வென்று அற்பபலன்களையும் விரும்பாமல் உயர்ந்த பலனை மோக்ஷத்தையும் விரும்பாமல் * இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன் * என்றும் * எம்மாவீட்டுத்திறமும் செப்பம் * என்றும் * வைகுண்டவாஸேபிந மேபிலாஷ: * என்றும் பரமபதத்தையும் வெறுத்துத் தள்ளி * எனக்குத் தேனேபாலே கன்னலேயமுதே * என்று ஸ்வயம் போக்யமாக அநுபவித்து அத்தலைக்கு மங்களாசாஸனம் செய்வது தவிர வேறொரு பேறில்லை யென்று அதுவே போதுபோக்கா யிருப்பார்கள் உத்மாதிகாரிகள். * த்வயயேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம் என்று தேசிகன் பணித்த கணக்கிலே எம்பெருமானிடத்திலும் கூட உபாயத்வபுத்தியைப் பண்ணுதே உபேயத்வ புத்தியையே பண்ணியிருக்கும் ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்கள் மஹாராஜன்

தானத்திலே மதிக்கப்படுவர்கள். அநுபாயங்களானவற்றிலுங் கூட உபாயத்வ புத்தியைப் பண்ணி நிற்குமவர்கள் வியாபாரிகளின் ஸ்தானத்திலே எண்ணப்படுவர்கள். க்ஷுத்ரபலார்த்திகள் செம்படவன்போல்வாரான நீசர்களின் ஸ்தானத்திலே நினைக்கப்படுவர்கள். மேலே விவரித்த மூன்றுபடிகளுக்கும் ரத்னம் இணங்கி யிருப்பதுபோல எம்பெருமானும் இணங்கி யிருத்தல் நன்கு உணரத்தக்கது.

ரத்னமானது சேற்றிலே கிடந்தால் மதிப்பறியாதவர்களாலே நிஷித்தமாகக் கருதப்பட்டு, மதிப்பறியுமவர்களாலே உள்ளபடியே கருதப்படும். எம்பெருமான் படியுமிப்படியே. * மாய வஞ்சேறறள்ளல் பொய்ந்நிலத்தே* என்று நம்மாழ்வாரருளிச்செய்தபடியே சேற்றுநிலமாகிய இவ்விருள்தருமாஞாலத்திலே எம்பெருமான் வந்து சேர்ந்தால் மதிப்பறியாத மாபாவிகள் * அவஜாநந்தி மாம் மூடா, மாநுஷீம் தநுமாச்ரிதம் * என்று கீதையில் அவன்தானே அருளிச்செய்தபடியே குறைய நினைப்பவர்கள். அந்த கீதையிலே * தத்வதர்சிந, என்று போற்றப்பட்ட மாஞானிகள் * எத்திறமுரலினோடியினைந் திறந்தேங்கியவெளிவே!* என்றும் * பிறந்தவாறும் வளர்ந்தவாறும்!* என்றும் மோஹித்துக் கிடந்து பேசி மதிப்பறிவில் குறையாதே யிருப்பார்கள்.

க்ருத்ரிமமான கல்லும் ரத்னமென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் வாசியறியமாட்டாதவர்களே பிரமிக்கும் படியாய் விலக்ஷணர்கள் அதில் கால்தாழாதே யிருப்பர்கள். அதுபோலவே, தேவதாந்தரங்களும் பகவானென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் ராஜஸ தாமஸர்கள் அவற்றிலே பிரமித்திருப்பர்களேயன்றி சுத்த ஸாத்விகர்களான விலக்ஷணர்கள் அவற்றை அடுப்பிடுகல்லோபாதியாக நினைத்துக் கண்ணெடுத்தும் பாரார்கள் "நீயாய் நீ நின்றவாறு" என்றது காண்க.

இங்ஙனே மற்றும்பலபல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

# தேவு மற்றறியேன்-17

தமதாசார்யரான நம்மாழ்வாரிடம் பெருங்காதல் கொண்ட மதுரகவிகள், ஆழ்வார் தமக்குப் பண்ணிய உபகாரத்தின் கனத்தையும், தமக்கு ஆழ்வார் பாலுள்ள நன்றியுணர்ச்சி, காதல் இவற்றையும் பலபாடல்களில் விரித்

Dr. V.V. ராமானுஜம்

துரைத்து, தாம் ஆழ்வாருக்கு ப்ரத்யுபகாரமாக என்செய்வதென்றறியாது அலமாந்ததைக் கண்டோம். இனி, இப்பிரபந்தத்தின் இறுதியில், திருநாமப் பாட்டில், இப்பாடல்களைக் கற்றுப்பாடுவார் வைகுந்தமேறி வாழ்ச்சி பெறுவர் என்று பயன் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

**அன்பன்தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்**
**அன்பன் தென்குருகூர் நம்பிக்கு**
**அன்பனாய் மதுரகவி சொன்னசொல்**
**நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே.** 11

“ஸர்வபூதஸுஹ்ருத்தான எம்பெருமானை ஆச்ரயித்த பாகவதர்கள் எல்லாரிடமும் பேரன்பு பூண்ட திருக்குருகூர் நம்பியான ஆழ்வாரிடம் ஆராத காதல் பூண்ட மதுரகவிகள் அருளிச்செய்துள்ள இந்த பாசுரங்களைத் (ஸத்யமென விச்வஸித்து) தமக்குத் தஞ்சமாக நினைப்பவருக்கு அடையக் கூடிய தேசம் பரமபதமான திருநாடே.

திருப்பல்லாண்டு கற்றவருக்குபலன், *பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே என்றுபோல் ஆழ்வார் விஷயத்தில் பக்திப் பெருக்கால் வெளிவந்த இந்த இன்பப் பாக்களைக் கற்றவர் ஆழ்வார் திருவடிகளையே

அடைந்து வாழ்ச்சி பெறுவர் என்கிறார். *உரைக்க வல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம் என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்தது போலே, இந்நாட்டிலேயே வைகுந்த வான் போகத்தை எய்துவர் என்னவுமாம்.

கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரபந்தத்தை ஆழ்ந்த நம்பிக்கையோடு 12000 உரு ஜபித்து ஆழ்வாரை ஸாக்ஷாத்காரம் பண்ணி, நாதமுனிகள் திவ்விய ப்ரபந்த பாசுரங்கள் 4000-த்தையும் அவரிடமிருந்து பெற்று இப்பூமண்டலத்தை வைகுந்தமாக்கிய சரித்ரம் ப்ரஸித்தமானது. விண்ணாட்டில் ஏதத்ஸாம காயந்நாஸ்தே என்று யாவரும் ஸாமகானமே பண்ணுவராக வேதம் ஓதியுள்ளது. அருளிச் செயலின்பம் அங்கு உண்டோ? இல்லையோ? தெரியாது. பராசரபட்டர் பிறந்த பிறகு இந்நாட்டுக்கும் விண்ணாட்டுக்கும் இடைச்சுவரற்றுப்போய் ஒன்றாய் விட்டன என்பர் நம் பூருவர்கள்.

அன்பன் என்பது எம்பெருமானை. அன்பன்தன்னை அடைந்தவர் *உலகமளந்த பொன்னடியே அடைந்துய்ந்தேன் என்றும், *அடிக்கீழமர்ந்து புகுந்தேனே என்றும் சொல்லுகிறபடி, அவன் தாள்பற்றிய ப்ரபந்நாதிகாரிகள். இவர்களைத் தம்கோக்கள் (ஸ்வாமிகள்) என்றும், தன்னை இவர்களுடைய "அடியோம்" என்கிறார் ஆழ்வார். *எந்தை பிரானுக்கடியார் அடியார் தம்மடியார் அடியார் தமக்கடியார் தம்மடியாரடியோங்களே என்பது ஆழ்வார் பாசுரம். அடியார் வரிசை பாட்டின் சந்தஸ் இடங்கொடுக்குமளவும் செல்வது காண்க. இப்படி பாகவத சேஷத்வ பூர்த்தி பெற்ற ஆழ்வார் திருவடிகளுக்கன்பனான மதுரகவிகள் பாசுரம் இந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்பு எனும் திவ்யப்ரபந்தமாம்.

அன்பன்—வாத்ஸல்யகுணபூர்ணனும் அடியார் குற்றம் காணாதவனுமான எம்பெருமான். பிரவதிக வாத்ஸல்ய ஜலதே என்றும் வாத்ஸல்ய மஹோததே என்றும் சொல்லுகிற

(தொடர்ச்சி 45ம் பக்கம்)

# ஸ்ரீ பாகவதப் பெருமை

இளையவில்லி பூவராஹாசாரியர் M. A.

**நாரதர் கூறுகிறார் :** வேத வேதாந்த கோஷங்களாலும், கீதா பாராயணத்தாலும், பக்தி, ஞானம், வைராக்யம் ஆகிய மூவரும் கண்விழித்து எழுந்திராதபோது ஸ்ரீமத் பாகவதத்தைப் பாராயணம் செய்வதால் அவர்கள் எப்படி எழுவர்கள்? அந்த பாகவதத்தின் ஒவ்வொரு ச்லோகங்களிலும், ஒவ்வொரு பதங்களிலும் வேதத்தின் பொருள்களே அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றனவேயன்றி வேறொரு விசேஷமும் இல்லையே? (ஆகவே இதன் பாராயணம் வேத பாராயணத்துக்கு ஸமம். வேதம் பயன் படாதபோது ஸ்ரீ பாகவதம் எப்படிப் பயன் படும்?) இந்த சந்தேகத்தைப் போக்க வேண்டும். உங்கள் தரிசனம் ஒருக்காலும் வீணாகாது. சரணமடைந்தவர்களிடத்தில் மிகுந்த அன்புடையவர்களான நீங்கள் இவ்விஷயத்தில் தாமதம் செய்யாமல் பதில் கூறவேண்டும்.

**குமாரர்கள் கூறுகிறார்கள்:** ஸ்ரீமத் பாகவதக் கதை, வேதங்கள் உபநிஷத்துக்கள் ஆகியவைகளின் ஸாரத்திலிருந்து தோன்றியது. ஆகவே மிகச் சிறந்ததாய் விளங்குகிறது. அவைகளின் பழத்தை ஒத்ததாகும். உதாரணமாக, ஒரு மரத்தில் வேரிலிருந்து கிளையின் நுனிவரை ரஸம் நிறைந்திருந்தாலும் தனிப்பட்டு பழமாகக் காணும் போது உலகில் எல்லோர் மனத்தையும் மயக்குகிறது. பாலில் இருக்கும் நெய் (நெய்யைத் தனியாய் அருந்துவதில் உள்ள) இன்பத்தை அளிப்பதில்லை, தனியாகப் (பாலிலிருந்து) பிரித்தெடுக்கப் பட்ட அந்த நெய் தேவதைகளுக்கு மிக்க இன்பமளிக்கும். கரும்பின் அடிமுதல் நுனிவரை சர்க்கரை வ்யாபித்து இருக்கிறது. ஆனால் அது தனியாகப் பிரித்து எடுக்கப்பட்டால்தான் மிகவும் ருசிக்கிறது. அதேபோன்று பாகவதக் கதையும் இது ப்ரஹ்மாவினால் கூறப்பட்டது. பக்தி ஞான வைராக்யங்களை உலகில் நிலை நிறுத்தலின் பொருட்டு வெளியிடப்பட்டது. முன்பு ஒரு சமயம், வேத வேதாந்தங்களை நன்கு உணர்ந்த

(தொடர்ச்சி 33ம் பக்கம்)



நீரகத்தான்





Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

# வியப்பில் திகைப்பு!

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் காஞ்சீபுரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கு 89 திருநக்ஷத்திரம் பூர்த்தி ஆகி, 90வது திருநக்ஷத்திரப் பிறப்பு விழா வழக்கம் போல் மிகவும் சிறந்த முறையில் ஸ்வாமி திருமாளிகையில் நடைபெற்றது. முடிவு நாளன்று எதிர்பாரத விதமாக சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் ஸ்வாமி திருமாளிகைக்கு வருகை புரிந்து அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார். அவர் வந்த போது கோஷ்டியில் இராமநுச நூற்றந்தாதி ஸேவித்துக் கொண்டிருந்தனர். பிறகு உபதேச ரத்தினமாலை. இவ்வளவும் முடியும் வரையில் அதாவது சுமார் இரண்டு மணிகாலம் கோஷ்டியிலேயே அமர்ந்திருந்தார் நீதிபதியவர்கள். பிறகு ஸ்வாமியின் விருப்பப்படியே சிறப்புரையாற்றினார். தமக்கே உரியபடி வெளிப்படையாகவே பேசி அனைவரது கருத்தையும் கவர்ந்தார். அவர் பேசியதன் சாராம்சம்: "நான் இங்கே வந்தது உங்களுக்குத் திகைப்பூட்டியிருக்கலாம். இப்படிப்பட்ட வைதிக கோஷ்டியில் இந்த சாயபுவுக்கு என்ன வேலை என்று கூட உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் நான் ஸ்வாமியின் மீது வைத்திருக்கும் பக்திக்கும் மரியாதைக்கும் சாதிவேறுபாடு, சமயவேறுபாடு போன்ற எந்த வேறுபாடுகளும் கிடையாது விபீஷணன் ராமபிரானிடம் சரணடைந்தபோது அவனை ஸ்ரீராமன் ஒதுக்கித்தள்ளவில்லை, தன்னைச் சரணடைந்தவனை ஒதுக்குவது தனது ஆண்மைக்கே இழுக்கு என்று கருதினான். அப்படியே ஸ்வாமியும் எனக்கு அருள் புரிந்திருக்கிறார். மேலும் ஸ்வாமிக்கும் எனக்கும் பலவிதங்களில் ஒற்றுமைகள் உண்டு,

இறைவன் திருவருளைப்பெற்றதில் நாங்கள் இருவரும் சமம். எந்த ஒருவிஷயத்தை எடுத்துக்கொண்டாலும் எனக்கு அதில் பிடிவாதம் அதிகம். நீதியை நிலைநாட்டுவதில் பிடிவாதம் இருந்தாக வேண்டுமல்லவா? ஸ்வாமிக்கும் பிடிவாதம் அதிகம் என்பது சொல்லத்தேவையில்லை. உண்மைகளை நிலைநாட்டு வதில் அவருக்குள்ள பிடிவாதம் உலகறியும். எனவே இப்படிப் பட்ட நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்ததில் வியப்பில்லை. ஸ்வாமியின் விழாவில் பங்குகொள்ளும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது தெய்வத்தின் அருளினால்தான். தனக்கென்று ஒரு சாந்தியோ ஹோமமோ எதுவும் செய்துகொள்ளாமல் பாகவதர்களை ஆதரிப்பதற்காகவே இவ்விழா நடத்தப் படுகிறது. உண்மையில் அரசியல்வாதிகள் 'பேசும்' சோஷலிசம் இங்குதான் உள்ளது. இப்படிப்பட்ட ஒரு பெரிய மகானுக்கு வாழ்த்துக் கூறும் தகுதி நமக்கில்லை. ஆயினும் எல்லாம் வல்ல இறைவனுக்கே 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்று பாடியவர்களின் வழிவந்த நாமும் ஸ்வாமி இன்னும் ஒரு நூற்றாண்டு வாழ வேண்டும் என்று (வாழ்த்தவில்லை), பிரார்த்திக்கிறேன்."

இஸ்லாமியமதத்தைச் சேர்ந்த ஒருவர், அதுவும் தலைமை நீதிபதி என்ற உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர் இப்படி ஒரு கோஷ்டியில் கலந்து கொண்டு, இவ்வளவு சிறப்பாக உரை யாற்றியதுகண்டு, அதுவும் வைணவ சம்ப்ரதாய அடிப்படைக் கொள்கைகளை விளக்கியதைக்கண்டு கோஷ்டியில் வியக் காதவர்களே இல்லை. இது மகிழ்ச்சியினாலும் வியப்பினாலும் ஏற்பட்டதிகைப்பு. இத்திகைப்பை எமக்களித்த தலைமை நீதிபதி அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

# உலகளந்தான் ஸன்னிதி

## T. A. பாஷ்யம்

**கண்ணன் :** பார்த்தா! இப்போது நாம் பவள வண்ணர் ஸன்னிதியிலிருந்து உலகளந்த பெருமான் ஸன்னிதி — என வழங்கப்பெறும் ஊரகத்தான் ஸன்னிதிக்குச் செல்வோம்! இந்த திருக்கோயில் பஸ் ஸ்டாண்ட்டிற்கு மிக அருகாமையில் காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. பெரிய காஞ்சியில் உள்ள நான்கு ராஜ வீதிகளுக்கு நட்டநடுவே அமைந்துள்ளது இந்த ஸ்தலம். மேலும் இந்த திவ்ய தேசத்தை ஸேவிப்பதன் மூலம் ஒரே சமயம் நாம் நான்கு திவ்ய தேசங்களை ஸேவித்தவர்களாகவும் ஆவோம்.

**பார்த்தன் :** என்ன? ஒரு கோயிலை ஸேவிப்பதன் மூலம் 4 திவ்ய தேசங்களை ஸேவித்ததாக ஆகுமா? புரியவில்லையே?

**கண்ணன் :** பார்த்தா தொண்டை நாட்டில் உள்ள 22 திவ்யதேசங்களில் 15 திவ்யதேசங்கள் காஞ்சியில் உள்ளன. அந்த 15 திவ்யதேசங்களில் 4 திவ்யதேசங்கள், இந்த ஊரகம் எனப்படும் உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் உள்ளே அமைந்துள்ளன. இதோ இதுதான் கோயில்.

**பார்த்தன் :** கோயிலின் அமைப்பே மிக நேர்த்தியாக உள்ளதே. இந்தக் கோயிலின் விவரங்களைச் சற்று கூறுவாயா!

**கண்ணன் :** இங்கே எம்பெருமான் பேரகத்தான் என்று மிகப் பிரம்மாண்டமான திருமேனியோடு திரிவிக்கிரமாவதாரத்தின் போது எந்த விச்வரூபமான திருமேனியை காண்பித்தானோ அப்படியே எழுந்தருளியுள்ளான். இதோ இதுதான் ப்ரதான ஸன்னிதி. ஸன்னிதிக்குள் சென்றதும் நம் கண்களையும் மனதினையும் மயக்கவல்ல அத்யாச்சர்யமான எம்பெருமானின் திருவிக்ரமாவதாரத் திருமேனியை நன்கு ஸேவி. ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப ஒரு காலும் காமரு சீர் அவுணனுள்ளத்து எண்மதியும் கடந்து

அண்டமது போகி இருவிசும்பின் ஊடு போய் எழுந்து மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி தாரகையின் புறம் தடவி அப்பால் முதலாய் நிற்கும் இந்த நிலையினை நாம் எங்கும் எந்த திவ்ய தேசத்திலும் காணமுடியாது. இந்த ஒரு திவ்ய தேசத்தில் மட்டுமே காணும் பாக்கியம் பெற்றுள்ளோம். தம்வலது திருக்கரத்தினை நீட்டி அதில் இரண்டு விரல்களைக் காட்டி தான் தனது இரண்டு அடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்துவிட்டதனைக் காட்டியும், இடது திருக் கரத்தில் ஒரே ஒரு அடி எங்கே எனக் கேட்பது போலவும், மகாபலியானவன் தனது சிரஸினை மடுத்துக் காட்ட, மூன்று வது அடியினை அவனது தலையின் மேல் தனது இடது திருவடி களால் அழுத்தியும் மற்றோர் (வலது) திருவடியை ஆகாசத் திற்கும் பூமிக்குமாய் அளக்கும் அவதாரத்திலும் காட்டி (ஸாரஸ்ரீகர) புஷ்பக விமானத்தில் மேற்கே திருமுக மண்டலத்தோடு நம்மை ஆட்கொள்ளும் இந்த திவ்ய மங்கள விக்ரகத்தினைக் காண். இந்தத் திருமேனியைக் கண்டு மயங்காதார் யார் இருக்க முடியும். முன்னம் உத்ஸவ எம்பெருமான் உபய நாச்சிமார்களோடு தந்தருளும் ஸேவையையும் பெற்றுக் கொள்.

**பார்த்தன் :** கண்ணா! இதோ ஒரு சிறிய ஸன்னிதி உள்ளதே இது என்ன?

**கண்ணன்:** இந்த ஸன்னிதிதான் ஊரகத்தான் ஸன்னிதி என வழங்கப் பெறுகின்றது. எம்பெருமான் ஆதிசேஷாவதார திருமேனியோடு ஐந்து தலை நாகமாய் சந்தனக் காப்புடன் இங்கே ஸேவை தருகின்றான். மஹாபலியானவன் தன்னால் எம்பெருமானை நிமிர்ந்து ஸேவிக்க இயலவில்லையே என வினவ எம்பெருமான் அவனுக்காக இங்கே இந்த நிலையில் தெற்கே திருமண்டலத்தோடு காட்சி தருகின்றான். இந்த ஊரகத்தான் ஸன்னிதி ப்ரார்த்தனை ஸ்தலம். ஆஸ்திகர்கள் இங்கே அடிக்கடி சந்தனக் காப்புடன் விசேஷ திருமஞ்சனமும்,

திருக்கண்ணமுது தளிகையும் செய்வதாகப் ப்ரார்த்தித்துக் கொண்டு அதனை நிறைவேற்றுகின்றனர்.

**பார்த்தன் :** ஆக, நீ ஏற்கனவே தெரிவித்தபடி இந்த ஸன்னிதியில் உள்ள 4 திவ்ய தேசங்களுள் இந்த இரண்டு ஸன்னிதிகளும் அடங்கி விட்டன இல்லையா கண்ணா?

**கண்ணன் :** இல்லை பார்த்தா! இந்த ஊரகத்தான் ஸன்னிதி, பேரகத்தானான த்ரிவிக்ரமன் ஸன்னிதி இரண்டும் சேர்ந்து ஒரே திவ்யதேசம்தான். இருவரையும் சேர்த்தே மங்களாசாஸனம் செய்துள்ளனர். மற்றைய 3 திவ்ய தேசங்கள் வெளி ப்ராகாரத்தில் எழுந்தருளி ஸேவை தரு கின்றனர். இனி உள்ளே உள்ள முதல் ப்ராகார ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு ஸன்னிதிக்கு வெளியே வந்து இரண்டாவது ப்ராகாரத்தினை வலம் வருவோம். இந்த 2 வது ப்ராகாரத்தில் உள்ள 16 கால் மண்டபம் மிக அழகாக அமைந்துள்ளது. இங்கே மணவாளமாமுனிகள் ஸன்னிதியும் மற்றும் ஆழ்வார், ஆசார்யர்கள், ஆண்டாள் ஸன்னிதியும் அமைந்துள்ளன இதனை அடுத்துள்ள ஸன்னதிதான் நீரகம் என வழங்கப் பெறுகின்றது. இந்த ஸன்னிதியில் மூலவர் 4 திருக்கரங்களோடு சங்கு சக்கரம் தரித்தும் வலது திருக்கையை அபய ஹஸ்த மாகவும் இடது திருக்கரத்தினை கதையைத் தாங்கியும் நின்ற திருக்கோலத்தோடு ஜகதீச்வர விமானத்தின் கீழ் தெற்கே திருமுக மண்டலமாய் ஸேவை ஸாதிக்கின்றார்.

**பார்த்தன் :** ஆக தற்போது நாம் ஊரகத்தான், நீரகத் தான் ஆகிய இரண்டு ஸன்னிதிகளை ஸேவித்தோம். இனி 3வது ஸன்னிதி எங்கேயுள்ளது?

**கண்ணன் :** இனி இப்படியே ப்ரதக்ஷிணமாகச் சென்றால் 3-வது ப்ரதக்ஷிணத்தில் உள்ள இந்த ஸன்னிதிதான் "காரகத் தான்" என வழங்கப் பெறும் திவ்யதேசம். இங்கே பெருமான்

கருணாகரப் பெருமாள் எனும் திருநாமத்தோடு வடக்கே திருமுக மண்டலத்தோடு ஆதிசேஷன் மீது வீற்றிருந்த திருக் கோலத்தில் பரமபத நாதனாக ரம்ய விமானத்தின் கீழ் ஸேவை ஸாதிக்கின்றார்.

**பார்த்தன்:** நன்று கண்ணா? இதோ நமக்கு எதிர்ப்புறம் உள்ள இந்த ஸன்னிதிதான் 4-வது திவ்ய தேசமோ?

**கண்ணன்:** இல்லை பார்த்தா! இந்த ஸன்னிதிதான் இந்த உலகளந்த பெருமாள் ஸன்னிதியின் தனிக்கோயில் நாச்சியாரான ஆரணவல்லித் தாயார் ஸன்னிதி. இந்தத் தாயாரை நாம் மங்களா சாஸனம் செய்த பின்பு கடைசியாக அமைந்துள்ள கார்வானத்து எம்பெருமானை ஸேவிக்கலாம் வா!

**பார்த்தன்:** ஓஹோ இதுதான் 4-வது திவ்யதேசமான கார்வானத்துப் பெருமான் ஸந்நிதியா? என்ன கண்ணா! இங்கே ஒரே உத்ஸவ மூர்த்திகளாய் எழுந்தருளியுள்ளார்களே? என்ன விசேஷம்?


**கண்ணன்:** பார்த்தா, மூலவராக ஸேவை ஸாதிப்பவர் கள்வர் பெருமாள் என வழங்கப் பெறும் கார்வானத்து எம் பெருமான். வடக்கே திருமுக மண்டலமாய் நின்ற திருக் கோலத்தில் புஷ்கல விமானத்தின்கீழ் இந்த எம்பெருமாள அடியார்களுக்கு ஸேவை தருகின்றான். இந்த மூலவருக்கு திருமுன்பே உத்ஸவரும் மற்றைய நீரகத்து காரகத்து உத்ஸவ மூர்த்திகளும் இந்த ஸன்னிதியிலேயே எழுந்தருளியுள்ளார் கள் சக்ரவர்த்தித் திருமகனாக ஸேவை ஸாதிக்கும் உத்ஸவர் நீரகத்து எம்பெருமான் உத்ஸவர்.

**பார்த்தன்:** நன்று கண்ணா! இந்த 4 எம்பெருமான் களையும் மங்களாசாஸனம் செய்த ஆழ்வார்கள் யார் யார்?

கண்ணன்: ப்ரதான எம்பெருமானுன ஊரகத்தானை பேயாழ்வார், திருமங்கை ஆழ்வார், திருமழிசை ஆழ்வார் மூவரும் மங்களாசாஸனம் செய்திருக்க, நீரகம், காரகம், கார் வானத்து எம்பெருமான்கள் மூவரையும் திருமங்கை ஆழ்வார் ஒருவர் மட்டுமே அதிலும் தமது திருநெடுந்தாண்டகம் எனும் திவ்யப்ரபந்தத்தில் "நீரகத்தாய்" எனும் ஒரே பாசுரத்தில் சேர்த்து அனுபவித்திருக்கிறார்.

பார்த்தன்: இங்கு நடைபெறும் உத்ஸவங்கள் பற்றி தெரிவிக்கவில்லையே கண்ணா!

கண்ணன்: இங்கே தை மாதம் புனர்பூசம் திருநக்ஷத்திரம் தீர்த்த வாரியாக ப்ரம்மோத்ஸவமும் ஆவணி சதுர்த்தி அங்குரார்ப்பணமாக திருப்பவித்திர உத்ஸவமும் நடைபெறுகின்றன. இந்த எம்பெருமானை திருமங்கை மன்னன் மங்களாசாஸனம் செய்யும் போது ஊரகத்துள் 'அன்னவனை' என்று பாசுரம் இடுகிறார். அந்த ஊரகத்துள் அன்னவன் எவ்வளவு மிகப் ப்ரம்மாண்டமான திருமேனியோடு எழுந்தருளியுள்ளான் என்பதை நேரில் ஸேவித்தே அறிய வேண்டிய ஒன்று. தேவராயத்தேவர்க்கும் தெளியாத ஒளியுருவாய் மூவராய் மூவர்க்குள் முதல்வனுன ஒரு தெய்வம் தனது திருவடியை தாவியளக்க ஒருதெய்வம் ப்ரம்ம, லோகத்திற்குள் வந்த அந்த எம்பெருமானது ஒரு திருவடியில் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்க்க, மற்றொரு தெய்வமானது அந்த பாத தீர்த்தம் பூமியில் கீழே நேரே விழாமல் தன் தலையில் தாங்கி நாரணன் பாதத் துழாயும் நலன் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் கலந்து கங்கையாய் ஓடவும் காரணமாய் நிற்கும் இந்த எம்பெருமானை ஸேவிக்கும் பேறு பெற்றோர் விண்ணுளாரிலும் சீரியரேயாவர். இந்த ஸன்னதியின் வாசலில் ஒருபுறம் வாஹன மண்டபமும் ஒருபுறம் வாமன (நாக) தீர்த்தமான புஷ்கரிணியும் ஸன்னிதி வீதியும் ஸன்னதிவீதியின் முடிவில் திருவடி ஸன்னதியும் அமைந்துள்ளன. சரி. இனி அடுத்த திவ்யதேசம் செல்வோம் வா.



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை—600 005.

# கீதாசார்யன்-19



ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

தொகுதி 2 | ரௌத்ரி ௵ | சித்திரை மீ | ஏப். 80 | பகுதி 7

*BOARD OF DIRECTORS*

P. T. SUNDARA VARADAN
Director (Finance)

★

## ஆஸ்திகரே!

சென்ற இதழில் அறிவித்திருந்தபடி மகிழ்ச்சியான செய்திகளுக்காக காத்திருக்கிறீர்களா! நாங்களும் மகிழ்ச்சியுடனே அறிவிக்கிறோம். அடுத்த இதழ் முதல் 'கீதாசார்யன்' அதிக பக்கங்களுடன்—64 பக்கங்களுடன் வெளிவருகிறது. அதுவும் அதே விலையில், மகிழ்ச்சிதானே!

N. GANA[illegible]
Director (Circulation)

★

R. RAVICHANDRAN
Director (Public Relations)

★

P. T. SRINIVASAN
Director (Administration)

★

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ 100 |
| வருடச் சந்தா | ரூ. 10 |

விலை ரூ 1—00

உங்களுடைய திகைப்பு எங்களுக்குப் புரிகிறது. 'இவ்வளவு குறைந்த விலையில், இவ்வளவு பக்கங்களுடனும், பொலிவுடனும் எவ்வாறு கிதாசார்யனை வெளியிடமுடிகிறது? ஏற்கனவே விலைவாசியின் ஏற்றத்திஞல் மற்ற பத்ரிகைகள் விலையை ஏற்றிக் கொண்டிருக்கும் போது கிதாசார்யன் மட்டும் அதே விலையில் பக்கங்களை அதிகரிக்கிறதே! இது தொடர்ந்து நீடிக்குமா?' என்றெல்லாம் எண்ணுவது எங்களுக்குப் புரிகிறது. 'கிதாசார்யன்' அருளினாலும், நீங்கள் அளித்து வரும் ஆதரவினாலும் கிதாசார்யனின் நிதி நிலைமை மகிழ்ச்சியூட்டுவதாகவே உள்ளது. அதுவும், கிதாசார்யன் ஆண்டு மலருக்கு நீங்கள் அளித்த வரவேற்பு......அப்பப்பா......சொல்லால் வடிக்க வொண்ணாது. ஏறக்குறைய எல்லாப் பிரதிகளும் விற்றுத் தீர்த்து விட்டன. தொடர்ந்து மேலும் சிறப்பாக பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வெகுவாக உள்ளது.

மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தியையும் படித்திருப்பீர்களே! உங்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற எங்கள் நிர்வாகக் குழு விரிவாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் என்ன என்ன எதிர்ப்பார்க்கிறீர்கள்? எங்களுக்கு ஆலோசனைகளை எழுதுங்களேன்!

இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தி! அதை அடுத்த இதழில் அறிந்து கொள்கிறீர்களா?

# அன்புள்ள வாசகரே!

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயப் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. இதற்குக்காரணம் ஸ்ரீ உ. வே. காஞ்சிபுரம் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தான் என்று முன்பே ஒரு முறை எழுதியிருந்தேன். அவ்வாசை நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் இது என்னால் முடியாத காரியம் என்று அறிவுரை கூறியவர்களே அதிகம். ஆயினும் நான் சோர்வடையவில்லை. தமிழில் பிரபல வாரப்பத்திரிகைகளான ஆனந்தவிகடன், குமுதம் போன்ற பத்திரிகைகள் எப்படி வண்ண அட்டைகளுடன் வருகிறதோ அப்படியே நமது வைணவ சமயப் பத்திரிகையும் அமையவேண்டும் என்பது எனது விருப்பம். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திவ்யதேசத்து எம்பெருமானின் திருவுருவத்தை அட்டையில் தாங்கி வரவேண்டும்; விஷயங்கள் எல்லோருக்கும் புரியும் வகையில் எளியமுறையில் இருக்க வேண்டும்; புதிதாக எழுதக்கூடியவர்களை ஊக்குவிக்க வேண்டும்....... இப்படிப் பல கனவுகள். என்னுடைய எண்ணங்களையெல்லாம் வெளிப்படுத்தியபோது, சுமார் 75 வருடங்களாக பத்திரிகைத் துறையில் தொடர்புடையவரும், நான்கு பாஷைகளில் பத்ரிகை நடத்தி வருபவருமான ஸ்ரீ உ. வே. P.B.A. ஸ்வாமியும் பிரபலமான பத்திரிகைகளி லெல்லாம் தொடர்புடையவரும், தமிழகத்தின் மிகப் பிரபல மான எழுத்தாளருமான திரு சாண்டில்யனும் எனக்கு பத்ரிகைத்துறையிலுள்ள சிரமங்களையெல்லாம் எடுத்துக் கூறினர். ஆனால் நான் பத்திரிகை ஆரம்பித்தே திருவது என்று விடாப்பிடியாக இருந்தபோது இப்பத்திரிகை சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கி, தமது முழு ஒத்துழைப் பையும் நல்கியவர்கள் அவ்விருவர்தான்.

வெகுவிரைவில் பத்ரிகை நடத்துவதன் சிரமங்களைப் புரிந்துகொண்டேன். ஒவ்வொரு மாதத்திற்கும் படங்களையும் கட்டுரைகளையும் சேகரித்தல், Block செய்தல், Proof

பார்த்தல், அச்சிடுதல், போன்ற பல கட்டங்களிருந்தன எப்படியோ எல்லாக் கட்டங்களேயும் தாண்டி ஸ்ரீதாசார்யன் உதயமானான். தவிரவும் ஸ்ரீ உ. வே. வேளுக்குடி K. வரதாச்சாரியர் ஸ்வாமி, ஸ்தலசயனத்துறைவார், Dr. V. V. ராமாநுஜம், இளையவில்லி பூவராஹாசரியர், அரங்கராசன் குண்டலம் திருமலாசாரியர், T. A. பாஷ்யம் போன்றோரும் அவ்வப்போது ஆலோசனைகள் கூறி, ஸ்ரீதாசார்யன் வளர்ச்சியை எளிதாக்கினார்கள்.

ஒரு பத்ரிகை எவ்வளவுதான் சிறப்பாக இருந்தாலும் அதன் நிர்வாகம் சிறப்பாக இல்லாவிட்டால் பத்ரிகை வளராது அல்லவா? மேலும் சந்தாதாரர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும் ஒரு பத்ரிகையின் நிர்வாகம் பற்றிக் கேட்கவே வேண்டாம். சந்தா வரவு வைப்பது, விலாசத்தைச் சரியாகக் குறித்துக்கொள்வது, ஒவ்வொருமாதமும் புத்தகங்கள் சரியாகப் போய்ச் சேரும்படி அனுப்புவது (?), சந்தா முடியும் போது அவர்களுக்குத் தெரியப்படுத்துவது,......... அப்பப்பா! சாண்டில்யனும் P. B. A. ஸ்வாமியும் கூறியவை எவ்வளவு உண்மையானவை! இப்பொழுது ஒப்புக்கொள்கிறேன் பத்ரிகை நடத்துவது மிகவும் சிரமமான காரியம் என்பதை! ஆனால் இவ்வளவு சிரமங்களேயும் மீறி கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளாக ஸ்ரீதாசார்யன் வெற்றிநடை போட்டுவருகிறான் என்றால், மேற்கூறிய மிகவும் சிரமமான பொறுப்புக்களை என்னுடன் கூடச்சுமக்கும் திரு. P. T சுந்தரவரதனும், திரு கணபதியுமே காரணம். பத்ரிகை நடத்துவதிலுள்ள சிரமங்களைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே பலர் விலகிநின்ற வேளையில் இவ்விருவர் மட்டும் துணிந்து தோள்கொடுத்து, மிகப் பெரும் சுமையாகிய நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். விலைவாசிகள் விஷம்போல் ஏறிவருகிற இந்நாளில் ஒரு பத்ரிகையை நஷ்டமில்லாமல் நடத்த வேண்டுமானால் நிதிக்காப்பாளரின் பொறுப்பு அதிகமாகிறது. அந்நிதிக்காப்பாளருடைய சிரமத்தை விளம்பரங்கள் பெறுவதன் மூலம் விளம்பரப் பொறுப்பாளர் குறைக்கிறார். இவ்விருவரும் சேர்ந்து இக்காரியங்களைச் செவ்வனே செய்தபிறகுதான் ஆசிரியருடைய


வேலையே தொடங்குகிறது. இவ்வாறு பல இன்னல்களிடையிலும் பத்திரிகை சிறப்பாக வளர்ச்சியடையக் காரணம் இவ்விருவரே!

உங்கள் அன்பும், ஆதரவும், ஆசியும் நாளுக்குநாள் அதிகமாகப் பெற்றுவரும் கீதாசார்யன் பிரமிக்கும் வகையில் வளர்ந்து வருகிறான். எந்தவித விளம்பரமும் நாங்கள் செய்யாதிருக்கும் போதே. சந்தாதாரர்கள் நாளுக்குநாள் நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறார்கள்.


இந்நிலையில்தான் ஆண்டுமலர் — ஆண்டு விழா ஏற்பாடுகள் வேறு குறுக்கிட்டன. எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு நாங்கள் செய்வதறியாமல் திகைத்தபோது கீதாசார்யனே அனுப்பியது போல எங்கள் உதவிக்குப் பலர் வந்தனர். குறிப்பாக K. E. B. ரங்கராஜன், P T விஜயராகவன், R. ரவிச்சந்திரன், P. T. ஸ்ரீனிவாஸன் போன்றோர் காலத்தினால் செய்தவுதவிகள் வார்த்தைகளில் அடங்கா! இப்படிப்பட்டவர்கள் நிரந்தரமாக நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றால் கீதாசார்யன் இன்னும் சிறப்பாக அமையுமே என்பது எங்கள் ஆவல். இதை வெளிப்படுத்திய போது அவர்கள் 'கீதாசார்யனுக்கு எங்களால் முடிந்த தொண்டுகளைச் செய்கிறோம். ஆனால் பத்திரிகையில் எங்கள் பெயரை வெளியிட வேண்டாம்.'' என்று பெருந்தன்மையோடு கூறினார்கள். ஆனால் விடுவோமோ நாங்கள்! எப்படியோ அவர்களைச் சம்மதிக்க வைத்து விட்டோம். முதல் கட்டமாக திரு R ரவிச்சந்திரனும் திரு P. T. ஸ்ரீனிவாசனும் கீதாசார்யன் நிர்வாகத்தில் பொறுப்பேற்கிறார்கள்.

இதுவரையில் நாங்கள் மூவரே நிர்வாகத்தை கவனித்து வந்தோம். எனவே உங்களில் பலருக்குப் பல குறைகள் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மேலும் பலர் ஒத்துழைப்புத் தர முன்வந்திருப்பதால் இனிமேல் ஒருகுறையும் ஏற்படாமல் பத்திரிகை நடத்துவதற்கான வாய்ப்பை கீதாசார்யன் அருளுவானாக; எப்போதும் போல் உங்கள் ஆதரவையும் ஆசியையும் எங்களுக்கு வழங்குமாறுகேட்டுக் கொள்கிறேன்.

வேங்கடகிருஷ்ணன்



காரகத்தான்



மாரகக்கால்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் கீதையை அருளிச் செய்தவருமான வேதவ்யாஸ மஹர்ஷி மனதில் சந்தோஷம் இல்லாமலும், அதற்குக் காரணம் இன்னதென்று தெரியாமலும் அறிவிழந்து, அஜ்ஞானப் பெருங்கடலில் மூழ்கி பரிதபித்து மோஹித்திருக் கையில் நீ, நான்கு ச்லோகங்களில் அடங்கியிருந்த இந்த ஸ்ரீபாகவதத்தை அவருக்கு உபதேசித்தாய். அதைக் கேட்ட வுடனேயே அவ்வியாஸரும் துயர் தீர்ந்தார். அப்படிப்பட்ட பெருமையையுடைய ஸ்ரீபாகவதத்தைப் பற்றி உனக்கு ஏன் இந்த ஆச்சர்யம் ஏற்பட்டது. இப்படி ஸந்தேஹத்துடன் கேள்வி கேட்கிறாய்? ஸ்ரீமத் பாகவதம் கேட்கப்பட்ட மாத்திரத்தில் வருத்தங்களையும், கஷ்டங்களையும் அடியோடு ஒழித்துவிடும் என்பதை மறந்துவிட்டாயோ?

நாரதர் கூறுகிறார்: எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதக் கதைகளையே பானம் பண்ணிக் கொண்டிருக்கும் மஹர்ஷி களே! வாருங்கள்! இக்கதை ஆதிசேஷனால் அனவரதமும் (இடைவிடாமல்) தன் ஆயிரம் வாய்களால் பாடப்படுகிறது. அப்படிப்பட்ட கதையைச் சொல்லுகிற உங்கள் தர்சனம் எல்லா அசுபங்களையும் அடியோடு ஒழிக்கும். ஸம்ஸார துக்க மாகிற காட்டுத் தீயால் கஷ்டப்படுகிற மாந்தர்களுக்கு உடன் நன்மையை அளிக்கவல்லது. பகவானிடம் பக்தியைத் தூண்டக்கூடிய உங்களைச் சரணமடைகிறேன். அநேக ஜன்மங் களில் மிக சிரமப்பட்டுத் தேடிய புண்ணியத்தினால் ஸாதுக் களின் சந்திப்பு ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் ஏற்படுகிறது. அப்பொழுதுதான் விவேகம் உண்டாகிறது. அஜ்ஞானத்தில் உண்டாக்கப்பட்ட மோஹம் என்கிற இருள் அகல்கிறது. அஹங்காரம் நாசமடைகிறது.

(இவ்வாறு நாரதர் பெரியோர்களையும், அவர்களின் ஸங்கமத்தையும் (சேர்க்கையையும்) மிகவும் கொண்டாடி னார். அடியார்கள் குழாங்களைக் கூட்டி அனந்த சயனனின் அருமை பெருமைகளை வாயாரப் பேசுவதைவிட, அல்லல் மிகுந்த இவ்வுலகில் சாந்தி விளைக்க வல்லது யாது உளது?)

[''ஸ்ரீ பாகவதப் பெருமை'' என்ற தலைப்பில் பத்ம புராணத்தில் உத்தரகாண்டத்தில் ''நாரத ஸநத் குமாரர்கள் ஸம்வாதம்'' என்ற இரண்டாம் அத்யாயம் முற்றும்].

# வரப்ரதானம்

பேராசிரியர் இரா. அரங்கராஜன், M.A, B.T.

திருவரங்கராகிய நம்பெருமாளுக்குத் 'தம்பிரான்மார் தம்பிரான்' என்ற ஒரு விருது உண்டு. திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்களான அரையர்களைத்தான் 'தம்பி ரான்மார்' என்று ஆசாரியர்கள் அழைத்துக் கௌரவித்தனர். அவர்கள் ஆழ்வார்களின் அருளிச்செயல்களான திவ்யப் பிரபந்தங்களில் சில பாசுரங்களுக்கு வியாக்யானமிட்டு அவற்றையும் இசையோடு திருவரங்கர் முன் விசேஷ காலங் களில் விண்ணப்பித்து வந்தனர். அந்த வியாக்யானங் களுக்குத் 'தம்பிரான் படி' என்று பெயர் வழங்குகிறது. இவ்வளவு பெருமைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்த தம்பிரான்மார்களுக்கு எல்லாம் ஒரு தம்பிரானாக இருப்பவர் நம்பெருமாள். 'பிரான்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு உபகாரம் செய்பவன் என்றும் பொருள்.

ஆம், திருவரங்கர் செய்த பேருபகாரத்தை நினைந்து நினைந்து வாழ்நாள் எல்லாம் உருகிக் கைம்மாறு காணாது ஒரு தம்பிரான் நெஞ்சம் தவித்தது!

திருவரங்கருக்குப் பங்குனி உத்திர ப்ரஹ்மோத்ஸவம் கோலாஹலமாகக் கொண்டாடப்பட்டது.

அன்று எட்டாம் திருநாள். நம்பெருமாள் உறையூருக்குச் சென்று அகிலாண்டேசுவரிக்குச் சேவை சாதிக்க வேண்டிய நாள். அன்றுதான் விடியற்காலையிலேயே நம்பெருமாள் புறப்பட்டு விட்டார். பக்தர்களும் பாகவதர்களும் முனிவர் களும் யோகிகளும் நம்பெருமாளைச் சூழ்ந்து கொண்டு தொடர்ந்தனர். அவர்களில் சிலருக்கு இனம் தெரியாத ஒரு திகில் நெஞ்சில் இழைந்து ஓடியது. உறையூர் சைவர்களின் கோட்டையாயிற்றே, ஒரு கலகமும் இல்லாமல் நம்பெருமாள் உற்சவம் கண்டருள வேண்டுமே என்ற அச்சம் உள்ளத்தில் படர்ந்திருந்தது.

திருவானைக்கா என்று சொல்லாமல் ஜெம்பூர் என்று குறிப்பிட்டனர் திருவரங்கத்திலிருந்த வைணவர்கள். ஜெம்பூருக்கு மிக அருகிலிருந்தது எல்லைக் கரை நாலுகால் மண்டபம். திருவானைக்கா சிவஸ்தலத்தையும் திருவரங்கம் திவ்யதேசத்தையும் பிரித்துக் காட்டும் எல்லைக் கரையில் திருவாழிக்கல் நடப்பட்டு அதேயிடத்தில் ஒரு நாலுகால் மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நம்பெருமாள் விடையாற்றிக் கொள்வதற்காக அங்கே எழுந்தருளினார்.

அப்போது மேற்கே சூரியன் சாய்ந்து கொண்டிருந்தான்.

திருவரங்கருக்கு அருகில் கூரநாராயண ஜீயர் த்ரிதண்ட ஹஸ்தராக நின்று கொண்டிருந்தார். அவருக்கிருந்த மனோ தைரியம் அவருடைய ஒவ்வொரு அவயங்களிலும் பிரகாசித்தது. அதைப் பார்த்ததும் பக்தர்கள் நெஞ்சில் தைரியம் ஊற்றெடுத்தது. ஆனாலும் ஏதோ ஒரு அதிசயத்தை அவர்களுடைய அடிமனம் எதிர்பார்த்தன.

திருவரங்கருக்குத் திருவந்திக் காப்பு மிக அமைதியாக ஆரவாரமின்றி நடந்தது. பெரிய கோயில் உத்தமநம்பி பக்தி சிரத்தையுடன் பெருமாளுக்கு உபசாரங்கள் சமர்ப்பித்தார், இளநீர் அமுது செய்வித்தார். அருகில் நின்று கொண்டிருந்த கூரநாராயண ஜீயர் எங்கோ நினைவை அவிழ்த்து விட்டிருந்தவர் திருவரங்கரின் திருமுக உபசாரத்தில் மனம் கொள்ளாமல் திருவரங்கரின் திருமுகத்தில் ஒருவித ஏக்கம் ரேகையாகப் படர்ந்து வருவதைப் பார்த்து விட்டார்!

யாரையோ எதிர்பார்த்துத் தவிக்கும் ஏக்கவுணர்ச்சியைக் கூரநாராயண ஜீயர் மட்டுமில்லை, அவர் அருகில் கைங்கரிய பரராயிருந்த சிறிய ஆயியும் பெரிய ஆயியும் கூட நன்றாகக் காண முடிந்தது. ஜீயரைக் காட்டிலும் அவர்கள் இருவரும் சற்றுத் தெளிவாகவே அதை உணர முடிந்தது. அதற்குக் காரணமிருந்தது.

நம்பெருமாளை ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பது போல் அவர்கள் எப்போதும் பரிவுடன் காத்து வந்தனர். முதலியாண்டாளின் திருப்பேரனுரானகந்தாடைதோழப்பரின் குமாரர்களான அவ்விருவரும் பெரிய கோயில் ஸ்ரீகாரியம் நிர்வஹித்து வந்தவர்கள். ஜ்ஞான பக்தி வைராக்ய நிஷ்டர்களாக விளங்கியவர்கள். அழகிய மணவாளப் பெருமாளின் திருமேனி கைங்கரியம், திருப்பவள கைங்கரியங்களை ஆராய்ந்து கொண்டு வாழ்ந்தவர்கள்.

ஒரு நாள் இரவு பக்குவமாகப் பாலமுது காய்ச்சி அமுது செய்யப் பண்ணும்போது சிறியவர் அதைப் பெரியவரிடம் காட்டினார். அதில் ஒரு சிறு துரும்பு மிதப்பது அவர் கண்ணில் பட்டுவிட்டது. அவ்வளவுதான்! 'இது பெரிய பெருமாள் திருமிடற்றில் குத்தி விடுமே" என்று நினைத்தார். தொண்டை விக்கி மூர்ச்சையாகி விழுந்து விட்டார். அதைப் பார்த்துச் சிறியவரும் மூர்ச்சித்து விட்டார்!

மூர்ச்சை தெளிந்ததும் அவ்விருவரையும் பெருமாள் அனுக்ரஹித்து ஒரு குழந்தையின் பாசத்துடன் 'பெரிய ஆயி! சிறிய ஆயி!!' என்று அழைத்தார். அந்த நிகழ்ச்சியிலிருந்து அவர்களுடைய இயற்பெயரை எல்லோரும் மறந்து விட்டனர். சிறிய ஆயி, பெரிய ஆயி என்றே விவகரித்தனர்.

மழலையின் ஏக்கத்தை மாதாக்கள்தானே தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்!

எவ்வளவுதான் உத்ஸாஹம் கரைபுரண்டாலும் உற்றார்கள் கூடிக் குலாவினாலும் தேசாந்தரம் சென்று விட்ட புத்திரனை நினைத்துத் தானே பிதாவின் ஹ்ருதயம் கிடக்கும்!

அவ்வளவு பெரிய அடியார் குழாத்தில் தேவப் பெருமாள் அரையரின் ஒரே குமாரன் விப்ரநாராயணனை மட்டும் இழந்திருக்க முடியுமோ, திருவரங்கரால்!

எங்கே அந்த விப்ரநாராயணன்?

ஸ்தானத்தாரும் ஸ்தலத்தாரும் அவனை பஹிஷ்கரித்து விட்டனர்! அவன் இனி ஸப்த ப்ராகாரங்களுக்குள் நுழைய முடியாது.

அப்படி என்ன குற்றம் செய்து விட்டான் விப்ரநாராயணன்? இசைக்கும் நடனத்திற்கும் அடிமையாகி விட்டது தான் அவன் இழைத்த குற்றம். கலை ஆர்வலனாக இருந்த விப்ரநாராயணனின் கண்கள் சாஸ்திர மர்யாதைகளுக்குக் குருடாகி விட்டதுதான் அவன் இழைத்த மாபெரும் குற்றம்!

எங்கிருந்தோ வந்தவள் தேவதேவி! அழகுக்கோர் உறைவிடமாகப் பிரகாசித்தாள். அவளுடைய பிரகாசத்தை ஒரு திருக்கார்த்திகைத் திருநாளில் விப்ரநாராயணன் பார்க்க முடிந்தது. பெரிய கோயில் தேவரடியார்களுடன் தேவதேவி திருவிளக்கு ஏந்தி வந்தபோது அவள் பாடிய தேவகானத்தைக் கேட்டு ஸ்தம்பித்துப் போன விப்ரநாராயணன் அவளுடைய கண் வலையில் விழுந்து விட்டான். வலையில் விழுந்த மீன் தப்ப முடியவில்லை. அவளுக்கே அடிமை பூண்டான். அரங்கனையும் மறந்து விட்டான். அப்போதுதான் ஊரார் கூடி அவனைத் திருமதிகளுக்குப் புறம்பு என்று ஒதுக்கி விட்டனர்.

ஊர் ஒதுக்கியதே ஒழிய உத்தமனான திருவரங்கன் ஒதுக்க வில்லை. விப்ரநாராயணன் தன்னுடைய தந்தையார் தேவப் பெருமாள் அரையரோடு திருவாய்மொழிப் பாசுரங்களை தேவ கானத்தில் ஏற்றிட்டு இசைக்கும்போது பார்க்க வேண்டும்! திருவரங்கனின் கொற்றப் புயங்கள் இசை கேட்டுப் பூரிப்படையும்.

எத்தனை நாட்கள் அவனைவிட்டுப் பிரிந்திருக்க முடியும்?

ஊர் கடத்தப்பட்ட விப்ரநாராயணன் ஊருக்கு வெளியில் எல்லைக் கரையோரமாயிருந்த ஒரு சேரியிலே தேவ தேவியுடன் தங்கிவிட்டான்.

தேவப் பெருமாள் அரையர் ஆசையோடு தம் ஒரே குமாரனுக்குத் தொண்டரடிப் பொடியாழ்வாரின் பெயரைச் சூட்டியிருந்தார் விப்ரநாராயணன் என்று. ஆழ்வாரின் கதை பிரதிபலித்து விட்டது !

அன்று தேவ தேவி விப்ரநாராயணன் இயற்றிருந்த திருவரங்கர் பள்ளி அபிநயம் பிடித்து ஆடிக் காட்டினாள். அவளுடைய ஆடலுக்குச் சரியாய் விப்ரநாராயணன் பறையை அடித்து முழக்கிக் கொண்டே உச்சஸ்வரத்தில் பாடிக் கொண்டிருந்தான். அந்தப் பாட்டின் ஒசை அலை அலையாகப் பிரவஹித்துத் திருவரங்கரின் எல்லைக்கரை மண்டபத்தைப் பிரளயமாக்கியது.

சிறிய ஆயி பெரிய ஆயி இருவருக்கும் அரங்களின் ஆசை விளங்கிவிட்டது. அதை எப்படி நிறைவேற்றுவது ? ஸ்தலத்தார் தீர்ப்பை மாற்ற முடியுமா? திருவரங்கரே ஆணையிட்டால் ஏன் நடக்காது? — இருவரின் இதயக்குமுறலுக்குச் செவிசாய்த்தார் நம்பெருமாள். மாதாக்களின் நினைவை மகன் நிறைவேற்றத் தயங்குவாரு?

கூர நாராயண ஜீயருக்கு அருளப்பாடு ஸாதித்து அருகே அழைத்தார் பெருமாள். அவர்தான் அன்று ஸ்தலத்தார் கூட்டத்தில் விப்ரநாராயணனைப் புறக்கணிக்கும் திட்டத்தையே வகுத்துக் கொடுத்தவர். "அந்த ஜீயரையே ஏவி விப்ரநாராயணனை அழைத்துக் கொண்டால் என்ன? கல்லும் முள்ளும் கொண்டு வெருட்டிய ஸுக்ரீவனை அனுப்பித்தானே விபீஷணாழ்வானை அழைத்துவரச் செய்து ஏற்றுக் கொண்டோம்" — இப்படியெல்லாம் நம்பெருமாள் திருவுள்ளத்தில் எண்ணங்கள் அலைமோதின.

விப்ரநாராயணனின் பள்ளும் பறையும் திருவரங்கரை மோஹிக்கச் செய்தது. காயக ஸார்வபௌமன் என்று திருவரங்கருக்கு ஒரு சிறப்பு உண்டு. இசை மோஹத்தில் விண்ணுலகையும் விலையாக வழங்கிவிடும் பரமஉதாரன் திருவரங்கன்.

''நாம் விப்ரநாராயணனின் பள்ளும் பறையும் கேட்கப் போர ஆசைப்பட்டிருக்கிறோம். அழைத்து வாருங்கள்!''— அரங்கனின் திவ்யாக்ஞை பிறந்தது.

அரங்கர் ஆணையைச் சிரமேற்கொண்டு ஜீயரும் அனைத்துகொத்துப் பரிகரங்களும் ஸ்தானத்தாரும் ஸ்தலத்தாரும் பறைச் சேரியிலே ஸ்தலாங்க மரியாதைகளுடன் குடிசைமுன் நின்றனர். விப்ரநாராயணன் நடுங்கினான், கூசினான், நாக்குழறினான். கூர நாராயண ஜீயர் அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு 'அரையரே! அரங்கர் ஆணை, நம்பெருமாள் உம்மைப் பிரிந்து செவி சிப்பாய்ந்திருக்கிறார். இன்று உம்மை விஷயீகரித்து விட்டார். எம்முடன் வருக' என்று அதிகாரம் தொனிக்கும் குரலில் அழைத்தார்; இல்லை ஆணையிட்டார்.

திருவரங்கர் திருப்பல்லக்கில் பூத்த புன்முறுவலுடன் விப்ரநாராயணனை வரவேற்றார்.

''நீசனேன் நிறைவொன்றுமிலேன்'' — அதற்குமேல் அரையரால் பேசமுடியவில்லை. திருவரங்கர் திருவோலக்கத்தில் நிற்பதற்கும் தமக்குத் தகுதியில்லை என்று அரையர் கால்கள் பின்னோக்கி இழுத்தன. ஒருமுறை திருவரங்கரின் திருமுகமண்டலத்தை ஏறிட்டு நோக்கினார்.

அரங்கனின் மனமோஹனமுகத்தில் நிலவும் மௌனம் தான் எவ்வளவு பேசுகிறது!

"அரையரே! உம்மிடம் ஒரு வரம் வேண்டி நிற்கிறோம்! தருவீரோ?".

அரையர் கண்கள் குளமாகிவிட்டன. கையும் மெய்யும் சோர்ந்து விட்டன. ஆசார சீலர்களான பெரியோர்களால் கடைகெட்டவன் என்று ஒதுக்கப்பட்ட ஒரு ஜீவனிடம் செங்கோலுடைச் செல்வர் வரம் வேண்டுவதா? என்ன அதிசயம்!

"அரையரே! இன்றுமுதல் எம்மைப் பிரியாது உம் இசையால் பாடியாடி மகிழ்விக்க வேண்டும் உம்முடைய திருப்பவளத்தால் பள்ளும் பறையும் கேட்கப் பாரித்திருக் கிறோம்".

அரையரும் மடியொதுக்கி வாய்புதைத்து 'நாயன்றே! நாயன்றே! தேவரீர் திருவுள்ளப்படியே ஆகிறது" என்று விண்ணப்பித்து நின்றார்.

திருவரங்கர் போர உகந்தருளி அவருக்குத் தீர்த்தம் திருப் பரிவட்டம் ஸ்ரீசடகோபன் திருமுகத்தின் தாழ்வடம் அனைத்தையும் பரிசாகக் கொடுத்தும் திருப்தியடையாமல் அரையருக்கு 'வரம் தரும் பெருமாள் அரையர்' என்ற பட்டப் பெயரையும் பிரசித்தமாக வழங்கினார்.

**"மாதரார் கயற்கண் என்னும் வலையுள்பட்டு அழுந்து வேனைப்**
**போதரே என்று சொல்லிப் புந்தியுட் புகுந்து தன்பால்**
**ஆதரம் பெருக வைத்த அழகன்!"**

அரையரின் திருவாக்கில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாடல் வரிகள் இசையில் தோய்ந்து எழுந்தன; நெஞ்சிலோ திருவரங்கரின் தோஷபோக்யத்வம் விரிந்து பரவியது.

தம்பிரான்மார் தம்பிரான்......அங்குக் கூடியிருந்த பெரு மக்களின் செவிகளில் இந்தத் தொடர் ஒரு பல்லவியை இசைத்துக் கொண்டே இருந்தது.

# மூட நம்பிக்கை

ஆண்டவன் மீதும், சாஸ்திரங்கள் மீதும் நாம் வைக்கும் நம்பிக்கையே 'மூட நம்பிக்கை' என்று சொல்லும் 'பகுத்தறிவாளர்கள்' உண்டு

அவர்களுடைய நம்பிக்கை எல்லாம் 'கெட்டிக்காரத் தனம்' என்றும், நம்முடைய நம்பிக்கைகள் மட்டும்; 'மூடத் தனம், என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

நான் சொல்கிறேன், நம்பிக்கையில், குருட்டு நம்பிக்கை, கெட்டிக்கார நம்பிக்கை என்று எதுவும் கிடையாது.

சொல்லப் போனால் நம்பிக்கை என்பதே ஒரு மூடத்தனம். அதிலே தனியாக ஒரு மூட நம்பிக்கை ஏது?

---

கவியரசு கண்ணதாசன்

---

நாட்டு மக்கள் எல்லோரையுமே நாத்திகர்களாக ஆக்கி விட முடியும் என்று நம்பித்தான் பெரியார் பிரசாரம் செய்தார்: இந்த நம்பிக்கை எப்படி முடிந்தது?

தனுஷ்கோடி எக்ஸ்பிரஸில் போனவர்கள் ஊர்போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையில் தான் போனார்கள்.

அந்த நம்பிக்கை மூடத்தனம் என்பதை அரியலூர் நிரூபித்தது.

நம்பிக்கை என்பது, இப்படி நடக்கும் என்று ஆசைப் படுவது. அப்படி நடக்காமலும் போய்விடலாம், அப்போது அது மூடத்தனமாகி விடுகிறது!

மகன் கல்லூரிக்குக் கட்டப் போகிறான் என்று நம்பித் தான் தகப்பன் பணம் அனுப்புகிறான்; அவன் அதை எப்படி யும் செலவழிக்கலாம்.

அழகான ஹோட்டல்; அருமையான சாப்பாடு; ஆரோக் கியமான முறையில் சமைக்கப்பட்டிருக்கும் என்று நம்பித் தான் சாப்பிடுகிறோம், சமையற் கட்டில் என்ன என்ன நடந்திருக்குமோ யார் கண்டது?

'இவர் நமது ஒழுங்கான பிரதிநிதியாக இருப்பார்' என்று நம்பித்தான் மக்கள் ஒருவருக்கு வோட்டளிக்கிறார்கள்; அவர் எப்படியெப்படியோ மாறிவிடுகிறார் !

நம்பிக்கை வெற்றிபெறும் போதுமட்டுமே கெட்டிக் காரத்தனம் போல் காட்சி அளிக்கிறது: மற்ற நேரங்களி லெல்லாம் அது மூடத்தனம்தான் !

ஆண்டவனை நம்புவதிலும் அதே நிலைதான் !

அது தோல்வியுற்றால் மூடத்தனம்; வெற்றி பெற்றால் கெட்டிக்காரத்தனம்.

ஆகவே நம்பிக்கை என்ற மூடத்தனம் மனிதனுகப்பிறந்த ஒவ்வொருவனுக்கும் உண்டு.

அதில் ஆஸ்திகன் மட்டுமென்ன தனி ஜாதி!

இது வரை எந்த நம்பிக்கை எல்லா நேரங்களிலும் பலித் திருக்கிறது?

ஆனால் நம்பிக்கை என்ற மூடத்தனத்தை ஏன் எல்லோருமே மேற்கொள்கிறார்கள்?

அதிலே மனத்துக்கு ஒரு சாந்தி.

தெய்வ நம்பிக்கை, நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்குமாகவே ஏற்பட்டது.

விஞ்ஞான நம்பிக்கையைப் போல் ஒரு கட்டத்தில் தோல்வியுற்றாலும், மறு கட்டத்தில் வெற்றிபெறுவது தான் தெய்வநம்பிக்கை.

'ஒரு சூத்திரதாரியின் கைப் பொம்மைகள் நாம்' என்பது மறுக்க முடியாதது.

மரணம் என்ற ஒன்று, அதைத் தினசரி வலியுறுத்துகிறது.

இவ்வளவுக்குப் பிறகும், தெய்வ நம்பிக்கையைச் சிலர், 'மூட நம்பிக்கை' என்பார்களானால்; 'நான் ஒரு மூடன்' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

முட்டாள்தனத்தில் இருக்கிற நிம்மதி, கெட்டிக்காரத் தனத்தில் இல்லை.

உடம்பிலே எல்லா நோயும் இருந்தும், 'ஒன்றுமே இல்லை' என்று நம்புகிற முட்டாள் ஆரோக்கியமாகவே இருக்கிறான்.

ஒரு நோயும் இல்லாமலேயே ஒவ்வொரு மயிர்க்காலையும் பார்த்து, இது அதுவாக இருக்குமோ' என்று ஆராய்ச்சி செய்கிற அறிவாளி நித்திய நோயாளியாகச் சாகிறான்.

'சுடு' என்று சொன்னவுடனேயே யாரைச் சுடுகிறோம் என்று பார்க்காமலேயே சுடுகின்ற படைகள்தாம் நாட்டுக்கு வெற்றித் தேடித் தந்திருக்கின்றன.

அந்த நேரத்தில் படைகள் பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கினால், பகுத்தறிவு மிஞ்சும்; நாடு மிஞ்சாது.

போரில் தயக்கம் காட்டிய அர்ஜுனனைப் பார்த்துக் கண்ணன் அதைத்தான் சொன்னான்.

'போர் என்று வந்தபின் உறவினர்கள் என்ற ஆராய்ச்சி வெற்றிக்கு உதவாது' என்றான்.

கடைசியில் கண்ணன் மீது மூட நம்பிக்கை வைத்துத் தான் அர்ஜுனன் காண்டீபத்தைத் தூக்கினான்; முடிவு வெற்றியாகக் கனிந்தது.

கீதையில் கர்மயோகம் மானிடக் கடமைகளை வலியுறுத்துகிறது.

பக்தியோகம், தியானத்தை வலியுறுத்துகிறது. கடமையும் நம்பிக்கையுடன்தான் நடைபெறுகிறது; தியானமும் நம்பிக்கையுடன்தான் நடைபெறுகிறது.

'மனம் உண்டானால் வழி உண்டு' என்பது பெரியோர் வாக்கு.

அது மானிட கர்மத்துக்கும் பொருந்தும். தியான தர்மத்துக்கும் பொருந்தும்.

ஆகவே தெய்வ நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று சொல்வதைப் பற்றி நான் வருந்தவில்லை.

''இந்த மூடனும் அந்த அறிவாளியும் நம்மிடம்தான் வரப் போகிறார்கள்'' என்ற நம்பிக்கை தெய்வத்துக்கு இருக்கிறதே, யார் என்ன செய்ய முடியும்!

(8ம் பக்கம் தொடர்ச்சி)

படி, வாத்ஸல்யமாகிற மஹாகுணமென்னும் ஸமுத்ரத்தில் மற்ற குணங்களெல்லாம் அமிழ்ந்துவிட்டனவோ என்னும்படியான வத்ஸலன். **ரிபூணுமபி வத்ஸல:** என்று பிராட்டி அருளிச்செய்தபடி ஆச்ரிதர் பக்கல் மட்டுமின்றி, பகைவர் பக்கலிலும் அன்பன். **ஸர்வபூதஸுஹ்ருத்** என்றபடி. தன்னை வழிபடுபவரை, தாழ்ந்த பலன்களை வேண்டினும், தன்னிடம் வந்து வேண்டி, பலன்தர ஒரு வாய்ப்பைத் தருபவராகையால், **உதாரா:** என்று கொண்டாடுமியல்பினன் தன்னையே புருஷார்த்தமாகக் (தன்னடிக்கீழ் வாழ்ச்சியே பெரும் பேருக) கருதுமதிகாரியைத் தன் ப்ராணனாகவே மதிப்பவன் பகவான். மதுரகவிகளே பெருமாயன்—என்னப்பன் என்று அவன் ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்களைக் கொண்டாடியுள்ளதை நினைக்க. எம்பெருமானுடைய குணங்களுக்குத் தோற்று, **குணைர்த்தாஸ்ய முபாகத:** என்ற இளைய பெருமாளைப் போல அடிமை செய்ய விரும்பும் ப்ரபன்னர்களை **அன்பன் தன்னை அடைந்தவர்** என்கிறார். எம்பெருமானுடைய அன்பு, தன் படைப்புகளான ஸர்வ சேதன அசேதனங்களிடமும் பரவி நிற்கும். ஆழ்வாரது, திருமாலடியார்கள் திறத்தில் மட்டுமே பரவும். **அடைந்தவர்கட்கெல்லாம்** என்கையாலே அடியார்கள் யாராகிலும் எப்படிப்பட்டவராகவாயினும் இருக்கலாம். *எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும் வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்று உள்கலந்தார் அடியார்தம்மடியார் எம்மடிகள் (எமக்கு ஸ்வாமிகள்) என்பதும் இவர்களைத் **தொழுகுலம்** என்று போற்றுவதும் *பரமனைப் பயிலும் திருவுடையார் **எவரேலும்** அவர் கண்டீர் எம்மையாளும் பரமர் என்னும் பாசுரமும் காண்க. ஆழ்வார் வேண்டிப் பெற்ற பேறும், *வடிவுடைமாதவன் வைகுந்தம் புகுந்து அந்தமில் பேரின்பத்து **அடியரோடிருந்தமை.** ஆக பகவானுடைய அன்பு பொதுவானது; ஸ்வரூப நிபந்தனமானது; ஆழ்வாரதோ, வைராக்ய பூர்வகமான ஸ்நேஹம்; பாகவதர்கள் பெருமையறிந்து அதற்குச் சேரப் பண்ணும் பக்தி விசேஷம்.

* அன்பன் தன்னை யடைந்தவர்கட்கெல்லாமன்பன் – என்பதை மதுரகவியாழ்வார் பரமாவும் பொருள் கொள்ளலாம். பகவத்ப்ரேமையே ஒருவுருக் கொண்ட (க்ருஷ்ணத்ருஷ்ணுதத்வம்) ஆழ்வாரை அன்பன் என்றும், ஆழ்வாரையடைந்து அவர் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றியவர் யாவரும் தமக் பூஜ்யரென்று போற்றுகையால் அடைந்தவர்கட்கன்பனுகிறார் மதுரகவிகள்.

தென்குருகூர் நம்பிக்கன்பனாய்—பகவத் பாகவத விஷயத்தில் ஆழ்வாருக்குள்ள ப்ராவண்யம் இவர் பிறந்த மண்வாசி—நிலப்பண்பினுலாகும். இவ்வூரில் பிறந்தாரடங்லும் பரம பாகவதர்கள். நம்பி—ஆத்ம குண பூர்த்தி படைத்தவர். ஆராவமுதனுன பெருமாளிடம் ஆராத காதல் கொண்டவர் குருகூர்நம்பி. அந்த நம்பியினும் வேறு தெய்வமில்லை என்ற மநோநிலை மதுரகவிகளது. பகவத் விஷயத் தளவன்றிக்கே, ததியரளவன்றிக்கே, ஆசார்ய விஷயத்திலூன்றியவர். ஒருவன் தனக்குப் புருஷார்த்தம் வேண்டினுல், பகவத் விஷயத்தைப் பற்றவமையும். அங்ஙன் தன்னுடைய விருப்பைப் புறம்பே தள்ளி, தான் பற்றும் பகவானின் மனமகிழ்வையே வேண்டின் அவனடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்களைப் பற்றவமையும். அவனுகப்பே நமக்கு முக்கியமான குறிக்கோள் என்பதை, " நீயுகக்கு நல்லவரொடு முழிதராயே—நாங்கள் வியக்கவின்புறும் என்று ஆழ்வார் தாமே காட்டியுள்ளார். கண்ணனும், மமப்ராணுஹிபாண்டவா ! என்கையால் ஆச்ரிதர்கள் அவனுக்கு உயிரானவர்கள் என்பது தெளிவு. அவர்கள் உகந்தால் ஈச்வரனுக்கும். இதனுல் ஸ்ரீவைஷ்ணவர்களும் உகக்க, ஆசார்யன் திருவடிகளில் நீக்கமில்லா அடிமை செய்ய வடுக்கும். ஒருவனை ஸ்ரீ வைஷ்ணவர்கள் உகப்பது அவன் ஆசார்யவான் (ஸதாசார்யஸம்பந்தம் பெற்றவன்) என்பது பற்றி. அர்ச்சாவதாரத்திலும், தான் விரும்பி விபவத்தில் ஆசார்யனுய் (கீதாசார்யனுய்) இருந்ததிற்காட்டில் ஸதாசார்ய ஸம்பந்தமே பெருமையுற்றது என்று கொண்டு

திருக்குறுங்குடி ஸ்ரீவைஷ்ணவ நம்பியாய் நம்பி ராமாநுசனைப் பணிந்தும் வீறு பெற்றான் எம்பெருமான். ஆசார்யனுகப்பே பெறுப்பேறாகக் கொண்டு அவனையொழியத் தெய்வம் மற்றில்லாதவர் என்ற நிஷ்டை படைத்தவர் ஸ்ரீமதுரகவியாழ்வார்.

ஆசார்யன் முதல்முன்னம் அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகையால் (அறியாதன—அறியவேண்டுவன—அறிவிக்கையால்) உத்தேச்யனும். பின்னர், பகவத் குணங்களில் வன்றி அநுபவிக்கையில் அதற்கு **போதயந்த : பரஸ்பரம்—துஷ்யந்திச ரமந்திச** என்கிறபடியே துணை தேட்டமாகையாலே, அதற்கு உசாத்துணையாக நின்று உத்தேசயனாகிறான். அதற்கு மேல், பிராட்டிபரிகரமாகையாலே, பகவத் ப்ராப்திக்குப் புருஷகாரமாய் அமைந்தும், பகவத் ப்ராப்தியான மோக்ஷ தசையில் ஸாத்யவ்ருத்தி ரூபத்தாலே உத்தேச்யனும். இவை நம்பிள்ளை அநுக்ரஹிக்கும் அர்த்தங்கள் பகவத் சேஷத்வம் ஸாத்யவஸ்துவான அவன் கைங்கர்யத்திலே மூட்டும். அந்த பகவான் உகக்கும்படி தத்விஷயத்திற்போல ததிய விஷயத்திலும் பண்ணும் பணி ஸாத்யவ்ருத்தி பாகவதருகப்பது ஆசார்ய கைங்கர்யத்தாலே. இது ஸாத்யவ்ருத்தியின் விசேஷ நிலை—ஸாத்யவிவ்ருத்தி. சரமபர்வகைங்கர்யம்.

**மதுரகவி**— ஆழ்வார் விஷயமாக இவர் பாடின பாசுரம் இவர்க்கே இனித்ததால் தம்மை மதுரகவியெனக் கூறுகிறார். **ஜன்மகர்மசமே திவ்யம்** என்று கண்ணன் தன் பிறப்பையும் சேவகங்களையும் இனியவை என்று சொல்லவில்லையா? இராமாநுசனின் மெய்யன்பன் என்பது கொண்டு "இல்லையெனக்கெதிர்—இல்லையெனக்கெதிர் — இல்லையெனக்கெதிர்" என்றார் எம்பார்.

**சொல் நம்புவார்**— இவை பொய்யில்லை-ஸத்யமே என்று ஆழ்ந்த நம்பிக்கை கொள்வார். ஸதாசார்யனே உத்தரமான—உத்தேச்யன் என்று அவன் பெருமையில் விச்வாஸம்பூண்டு ஆசார்ய நிஷ்டையில் நின்று ஒழுகுபவர். இப்படிப்பட்டவர்களுக்கு வாஸஸ்தானமான தேசம் ஆழ்வாரரணையே விலை செல்லும் திருநாடான வைகுந்தம். "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்றார் ஆழ்வாரும். மதுரகவி சொல் நம்புவார் வைகுந்தம் சேர்ந்தல்லது நில்லார். இவர்கள் வைகுந்தம் சேருதல் நிச்சயம். இது ஸத்யம்.

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்